IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**MC. 11/2024 Date : 26.05.2026 P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வள்ளி | ஆதார்எண் | |
| கணவர் பெயர் | மணிகண்டன் | தொழில் | வீட்டுகுடித்தனம் |
| கிராமம் | உளுந்தாண்டார்கோவில் | வயது | 42 |
| எதிர்மனுதாரர் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை..**

1. எனக்கு திருமணம் ஆகி எத்தனை ஆண்டுகள் ஆகின்றது என்றால் 30 வருடங்கள். கடந்த 2 வருடங்களாக நான் என கணவரை பிரிந்து வாழ்கிறேன் என்றால் சரியல்ல, 4 வருடங்களாக பிரிந்து வாழ்கிறேன். வீடு கட்டுவதில் இருந்து தான் எதிர்மனுதாரருடன் பிரச்சனை என்று சொன்னால் அதற்கு முன்பு இருந்தே பிரச்சனை இருந்தது.

2. வீடு கட்டுவதற்கு முன்பு இருந்தே பிரச்சனை சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் காதலித்து திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். காதல் திருமணத்திற்கு என் பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை என்றால் சரிதான், பின்னர் திருமணத்திற்கு வந்தார்கள். என் பெற்றோர் என் திருமணத்திற்கு வரவில்லை என்றாலும், நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. எங்கள் திருமணம் எங்கு நடந்தது என்றால் விருத்தாசலம் கொளஞ்சியப்பர் கோவிலில் நடந்தது. திருமண ஏற்பாடுகளை எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் இல்லை, என் மாமனார் செய்தார். திருமணத்திற்கு 6 மாதம் கழித்து தான் என் பெற்றோர் என்னிடம் பேச ஆரம்பித்தார்கள் என்றால் சரிதான், பின்னர் சீர்வரிசை செய்தார்கள்.

4. என் பெற்றோர் செய்த சீதன நகைகளை விற்று வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கினோம் என்றால் சரிதான். வீடுகட்டியதால் தான் பிரச்சனை ஏற்பட்டு பிரிந்து என் தாயார் வீட்டுக்கு சென்றேன் என்றால் சரிதான். வீடு அருகால் வாசப்படி வைக்கும் நிகழ்ச்சிக்கு என்னை சமாதானம் செய்து அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான்.

5. வீடு அருகால் வாசப்படி வைக்கும் நிகழ்ச்சிக்கு ஒரு வாரம் கழித்து என் வீட்டிற்கு மறுபடியும் சென்று விட்டேன் என்று சொன்னால் சரிதான். வீடு கிரகபிரவேசத்திற்கும் என்னை சமாதானம் செய்து எதிர்மனுதாரர் அழைத்து வந்தார் என்றால் சரியல்ல, என் மாமனார்,மாமியார் போன் செய்து என்னை அழைத்தார்கள். வீடு கிரகபிரவேசத்திற்கும் என்னை சமாதானம் செய்து என் மாமனார், மாமியார் அழைத்து வந்து எத்தனை நாட்கள் என் கணவர் வீட்டில் இருந்தேன் என்றால் 9 நாட்கள் இருந்தேன்.

6. திரும்பவும் நான் என் கணவருடன் சண்டை போட்டுக்கொண்டு என் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். என் கணவர் வெளிநாட்டிற்கு சென்று சம்பாதித்தபோது நான் தான் வீடு பராமரிப்பு, வரவு செலவுகளை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். என் அம்மா, அப்பா வீட்டிற்கு வந்த பிறகு தான் மீன் வியாபாரம் செய்கிறேன் என்றால் இல்லை, எதிர்மனுதாரர் வெளிநாட்டிற்கு சென்றபோது அவ்வப்போது மீன் வியாபாரம் செய்து வந்தேன்.

7. மீன் வியாபாரம் செய்வதன் மூலம் தினமும் ரூ.1000 முதல் ரூ. 2000 வரை சம்பாதிப்பேன் என்று சொன்னால், சாதாரண நாட்களில் ரூ.300, 400 ரூபாயும், ஞாயிற்று கிழமைகளில் ரூ.500 வருமானம் வரும். எனக்கு தலைவலி இருப்பதால் அவ்வப்போதுதான் வியாபாரத்திற்கு செல்வேன். மீன் வியாபாரம் செய்வதன் மூலம் வரும் வருமானத்தை நானே வைத்து கொள்வேன் என்றால் சரியல்ல, என் கணவருக்கு லோன் எடுத்து கொடுத்து அடைத்துள்ளேன்.

8. என் கணவருக்கு எவ்வளவு லோன், தண்டல் எடுத்து கொடுத்துள்ளேன் என்றால் ரூ.10,000/- பின்னர் ரூ, 20,000/- எடுத்து கொடுத்துள்ளேன். நான் என் கணவருக்கு பணம் தரவில்லை என்றாலும், என் கணவர் வெளிநாட்டிற்கு செல்லும்போது மட்டும் ரூ.10,000/- கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. 2017 ம் வருடம் என் கணவரின் தகப்பனாரின் பூர்வீக சொத்தை பாகபிரிவினை செய்வதில் பிரச்சனை இருந்ததன் காரணமாக என் பெயரில் என் கணவர் மற்றும் பங்காளிகள் எழுதி வைத்தார்கள் என்றால் சரியல்ல, பத்திரம் எழுதுவதற்கு பத்திர செலவுக்கு நான் ரூ.26,000/- செலவு செய்தேன், சொத்திற்கு என்று பணம் தரவில்லை.

10. மேற்படி சொத்தை விற்று தான் என் கணவர் டாடா ஏசி வாகனம் வாங்கினார் என்றால் சரிதான். என் மகள் திரிஷா திருமணத்தின்போது நாங்கள் ஒன்றாக தான் இருந்தோம் என்றால் சரிதான். என் மகள் திரிஷாவும் காதல் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். என் மகள் திரிஷா திருமண சமயத்தில் வீடு கட்டி கொண்டிருந்ததால் சீர்வரிசை செய்யமுடியாது என்று எதிர்மனுதாரர் கூறிவிட்டார் என்றால் சரிதான்.

11. என் மகள் திரிஷா திருமணத்திற்கு நான் 3 பவுன் நகை மற்றும் சீதன பொருட்கள் செய்தேன் என்றால் சரிதான். என் திருமணத்திற்கு வந்த சீர்வரிசை பொருட்களை தான் என் மகள் திருமணத்திற்கு சீர்வரிசை பொருளாக கொடுத்தேன் என்றால் சரிதான், எதிர்மனுதாரர் என் சீர்வரிசை பொருட்களை வீட்டில் இருந்து தூக்கிஎறிந்துவிட்டார் அதனால் நான் என் மகளுக்கு சீர்வரிசையாக கொடுத்தேன்.

12. எதிர்மனுதாரர் வீடு கட்டும்போது எந்த உதவியும் செய்யாததாலும், வெளிநாட்டில் இருந்து சம்பாதித்து அனுப்பிய பணத்தை எதிர்மனுதாரரிடம் கொடுக்காததாலும், மீன் வியாபாரம் செய்த தொகையை எதிர்மனுதாரருக்கு கொடுக்காததாலும் தான் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. வீடு கட்டும்போது தான் என் மகள் திருமணத்திற்கு 3 பவுன் சீர்வரிசை செய்தேன் என்றால் சிறுக சிறுக சேர்த்து செய்தேன்.

13. என் கணவர் வேறு பெண்களுடன் தகாத உறவில் இருந்தார் என்றால் அந்த பெண்களின் பெயரை சொல்ல முடியுமா என்றால் ஒரு பெண் என்றால் பெயர் சொல்லலாம் பல பெண்களுடன் என் கணவர் தகாத உறவில் இருந்தார். நான் என் பிரமாண வாக்குமூலத்தில் இரண்டு பெண்களின் பெயரை சொல்லி உள்ளேன் அந்த பெண்கள் என் கணவருக்கு வீடு கட்டும்போது பண உதவி செய்ததால் அவர்களுடன் என் கணவர் தகாத உறவில் இருப்பதாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல .

14. இரண்டு பெண்களின் பெயரை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் முருகையன் மனைவி சரோஜா என்ற பெண்ணுடன் என் கணவர் தகாத உறவில் உள்ளார். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள திருநங்கைக்கும் என் கணவருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் திருநங்கையுடன் என் கணவர் தகாத உறவில் உள்ளார்

என குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல.

15. என் கணவர் 4, 5 நபர்களிடம் ரூ. 27 லட்சம் கடன் வாங்கியுள்ளார் என்றால் அவர் என்னிடம் கூறியது இல்லை. எனது கணவர் கொத்தனார் மேஸ்திரி என்பதால் அவரே வீடு கட்டினார் என்றால் அவரும் வேலை செய்வார் ஆட்களும் வந்து வேலை செய்வார்கள். மேற்படி வீட்டின் மதிப்பு ரூ.35 லட்சம் என்றால் இருக்கும்.

16. எனது இரண்டாவது மகள் எங்கு படிக்கிறார் என்றால் தெரியாது, கல்லூரி படிக்கிறார். எனது வயது என்ன என்றால் 42 ஆகும். எனது இரண்டாவது மகளின் படிப்பு செலவுகளை என் கணவர் தான் பார்த்து வருகிறார் மற்றும் அவருடன் தான் உள்ளார் என்றால் சரிதான். எனக்கு திருமணத்தின் போது வயது 12 என்றால் சரிதான். வயது 12 என்பது ஒரு குழந்தையை பெற்றுக்கொள்ள கூடிய வயது இல்லை என்று சொன்னால் சரிதான்.

17. போதிய வயது இல்லாததால் தான் எனக்கு 2, 3 தடவை கரு கலைந்தது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் அடித்ததால் தான் கரு கலைந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னை அடிக்கவில்லை என்றாலும், எனக்கு குழந்தை பெற்றுக்கொள்ள போதிய வயது தகுதி இல்லாததால் தான் எனக்கு 2, 3 தடவை கரு கலைந்தது என்றால் சரியல்ல.

18. கடந்த 4 வருடத்திற்கு முன்பு தான் பிரச்சனை அதற்கு முன்பு சந்தோசமாக தான் இருந்தோம் என்றால் இல்லை. உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதற்காக புகார் அளித்தேன் என்றால் வரதட்சனை கொடுமை சம்மந்தமாக புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் நான் என் சீதன பொருட்களை பெற்றுதரம்படி கேட்டேன் போலிசார் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொள்ள கூறினார்கள்.

19. நான் வீட்டில் இருந்து வீட்டை பார்த்து கொண்டால் சேர்ந்து வாழலாம் என்று எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் கூறினார் என்றால் அது பற்றி தெரியாது. நான் வீட்டில் இருந்து வீட்டை பார்த்து கொண்டால் சேர்ந்து வாழலாம் என்று எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் கூறியதற்கு நான் ஒத்துக்கொள்ளாமல் வழக்கறிஞர் நோட்டிஸ் கொடுத்து வழக்கு தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல.

20. நான் தற்போதும் மீன் வியாபாரத்திற்கு சென்று தினமும் ரூ.1000/- சம்பாதித்து வருகிறேன் என்றால் சரியல்ல, அவ்வப்போது வியபாரத்திற்கு செல்வேன், தினமும் ரூ.1000/- கிடைக்காது. எதிர்மனுதாரர் வீடு கட்டியதில் ரூ.27 லட்சம் கடன் பெற்று அதற்கு தவனையாக மாதம் ரூ.50 ஆயிரம் கட்டி வருகிறார் என்றாலும், என் இரண்டாவது மகளை அவர் தான் பராமரித்து வருகிறார் என்றாலும் அதனால் என்னை பராமரிக்கும் அளவிற்கு எதிர்மனுதாரருக்கு வசதி வாய்ப்பு தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல.

21. மேற்படி கடன் பெற்ற ரூ.27 லட்சத்திற்கு நீதிமன்றத்தில் யார் யாரிடம் பெற்றதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது, அவர் என்னிடம் கூறியது இல்லை. நான் மைனராக இருக்கும்போது திருமணம் செய்ததால் என் திருமணமே செல்லாது என்றாலும், அதனால் எனக்கு ஜீவனாம்ச தொகை பெற தகுதி இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Typed by Typist – E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.05.26 19:30:58 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.